GODependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்



**நவம்பர் 2024**

## வாசிப்போம் சிந்திப்போம் ...




உலகமெங்கிலும் ஒரு வருடத்தில் சுமார் 10 கோடி வேதாகமங்கள் பல்வேறு மொழிகளில் அச்சிடப்படுகின்றன. உலகில் அதிக அளவில் விற்பனையாகும் புத்தகங்களில் பரிசுத்த வேதாகமம் நீண்டகாலமாக முதலிடத்தில் இருந்து வருகிறது. ஆயினும், இன்றும் தங்களுடைய வீட்டில் வேதாகம பிரதி ஒன்று கூட இல்லாத கிறிஸ்தவ வீடுகளும் உண்டு; அதே சமயத்தில், ஒன்றுக்கும் மேற்பட்ட வேதாகமங்களை வாசிக்காமலேயே பத்திரமாக பூட்டி வைத்திருக்கும் கிறிஸ்தவ குடும்பங்களும் உண்டு.

மாறிவரும் தகவல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால், இன்று ஒரு கையடக்க கைபேசியில் இருந்தே எந்த மொழியிலும் மற்றும் எத்தனை வேதாகமங்களையும் சேமித்து வைத்து, நாம் நினைத்த மாத்திரத்தில் வாசிக்கவும் முடியும். ஆனால், நாம் அனுதினமும் வேதம் வாசிக்கிறோமா அல்லது அனைத்து கிறிஸ்தவர்களும் அனுதினமும் வேதம் வாசிக்கிற கிறிஸ்தவர்களா என்று கேட்டால், பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர்களை விட, வாசிக்காதவர்கள்தான் மிகவும் அதிகம் என புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிப்பதற்கு முன்பு, இன்று வேதாகமம் எளிதாக கிடைப்பது போல வேதாகமங்கள் எல்லோரிடமும் இருந்ததில்லை. ஜோகன்ஸ் கூடன்பர்க் கி.பி 1450களில் முதன் முதலாக வேதாகமத்தை அச்சிடும்போது சுமார் 180 பிரதிகளே அச்சிட்டதாக சொல்லப்படுகிறது. கூடன்பர்க் இலத்தீன் வல்கேட் எனப்படுகிற இலத்தீன் மொழி வேதாகமத்தை அச்சிட்டார். கூடன்பர்க் அச்சிட்ட வேதாகமங்களில் 49 பிரதிகள் இன்றும் சில அருங்காட்சியகங்களில் பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. உலக அளவில் பெரும்பாலான மொழிகளில் பரிசுத்த வேதாகமமே முதலாவது அச்சிடப்பட்ட நூல் என்ற பெருமை வேதாகமத்திற்கு உண்டு. வேதத்தின் பெருமைகளைச் சொல்ல உள்ளேயும் வெளியேயும் ஆயிரம் ஆதாரங்களை அடுக்கலாம்.

ஆயினும், வேதாகமமும் மற்ற மதநூல்களைப் போல ஒன்றுதானே, அதில் என்ன தனித்தன்மை இருக்கப் போகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது எப்படி இந்த நவீன கால தேவைகள் மற்றும் சவால்களுக்கு போதுமானதாக இருக்கும் என்பன போன்ற கேள்விகளை இன்றைய தலைமுறை கேட்கக்கூடும். வேறு சிலர், வேதாகமம் உண்மையிலேயே தேவனுடைய வார்த்தைதானா, அதற்கு என்ன ஆதாரம்? என்று நினைக்கலாம். இந்த ‘வாசிப்போம் சிந்திப்போம்’ தொடரில், வேதாகமத்தின் சிறப்புகளையும், வேதாகமம் அனுதின கிறிஸ்தவ வாழ்விற்கும் விசுவாசத்திற்கும் அடிப்படையானது என்பதையும் விளக்கும் ஒரு சில காரியங்களையும், அனுதின வேத வாசிப்பு ஏன் அவசியம் என்பதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

தொடர்ந்து வாசிப்பதற்கு முன் உங்களுக்கு ஒரு கேள்வி: ”நீங்கள் இதுவரை ஒரு முறையாவது பரிசுத்த வேதாகமத்தை முழுவதுமாக வாசித்திருக்கிறீர்களா? வேத வாசிப்புச் சவால்களில் சேர்ந்து, குறித்த காலத்தில் வேதத்தை வாசிக்க, எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்ந்து வாசிப்போம் சிந்திப்போம்...

**- சகோ. அற்புதராஜ் சாமுவேல்**

### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ **GODependence** நாடுகிறது.

**பாவம் மனுக்குலத்திற்குள் நுழையும் முன்பு எல்லா விலங்குகளுக்கும் பச்சையான பூண்டுகளே உணவாயிருந்தன. - ஆதியாகமம் 1:30.**

**உங்களுக்குத் தெரியுமா?**

**ஆதாம் ஏதேன் தோட்டத்தில் படைக்கப்படவில்லை. ஆதியாகமம் 3:23, 2:8,15**

**நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை நேசிக்கவில்லை எனில், நிச்சயமாகவே நீங்கள் அதைத் தந்த தேவனையும் நேசிக்கவில்லை. - சார்லஸ் ஸ்பர்ஜன்**

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

GODependence ஊழியம் ஆரம்பித்து 5 வருடங்களாக தொடர்ந்து தேவனுடைய மகிமைக்காக செயல்படும் இவ்வேளையில் இதன் முதலாவது செய்திமடலை வெளிக்கொண்டு வருவதில் தேவன் பாராட்டின கிருபைக்காக பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

'உண்மையான விடுதலை தேவனை சார்ந்திருப்பதிலேயே உள்ளது' என நாங்கள் நம்புகிறோம். இந்த உண்மையை மனதிற் கொண்டு 'ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான தரிசனம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது' தான் எமது தரிசனம். வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ நாங்கள் நாடுகிறோம்.

வேத வாசிப்பும் ஜெபமும் ஒரு விசுவாசியின் இரு கண்கள் போன்றவை. பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த அறிவின்மை பரிசுத்த தேவனைக் குறித்த அறியாமைக்குள் நடத்துகிறது. 'வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே' (யோவான் 5:39) என்றார் இயேசு கிறிஸ்து. வேத ஆராய்ச்சியின் (Bible Study) ஆரம்ப கட்ட செயல்பாடு தான் வேத வாசிப்பு (Bible Reading). அதனையாவது நாம் முறையாக செய்கிறோமா?

நமது GODependence செய்தி மடலில் இந்த ஊழியம் மூலம் நடைபெறும் வழக்கமான வேத வாசிப்பு சவால்கள் குறித்த தகவல்கள், ஒவ்வொரு மாதமும் வெற்றிகரமாக பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடிப்பவர்களின் விபரங்கள், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தும் சாட்சிகள், இதன் மூலம் முன்னெடுக்கப்படும் பிற ஊழிய முயற்சிகள் குறித்த தகவல்கள் வழக்கமாக வெளிவரும். அத்துடன் ஒவ்வொரு இதழிலும் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவும் செய்திகள், துணுக்குகள், பெரியவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான வேத வினாவிடை பகுதிகளும் இருக்கும்.

நமது GODependence செய்தி மடல் தற்போது தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளிவருகிறது. இதனை நாங்கள் மாதந்தோறும் வெளிக்கொண்டுவர ஜெபத்துடன் திட்டமிடுகிறோம். இதனை நீங்கள் வாசிக்கும் பொழுது கண்டிப்பாக உங்கள் ஆவியில் உற்சாகம் அடைவீர்கள், வேத வாசிப்பில் வளருவீர்கள். வேத வசனத்தைக் குறித்த வாஞ்சையும் தாகமும் உங்களுக்குள் பெருகும். அதன் மூலம் நீங்கள் கிறிஸ்துவுக்குள் அவரை சார்ந்து இருக்கும் வாழ்க்கையில் வளருவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், ஜெபிக்கிறோம்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

---

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள்

### துதிப்போம்:

1. கடந்த 5 வருடங்களாக GODependence ஊழியத்தை ஆண்டவர் தொடர்ந்து நடத்தி வரும் விதங்களுக்காக.
2. GODependence ஊழியத்திற்கென தேவன் கொடுத்திருக்கிற தரிசனம் (Vision) மற்றும் பணித்திட்டம் (Mission) இவைகளுக்காக.
3. ஒவ்வொரு மாதமும் மாதத்தின் முதலாம் நாளில் ஆரம்பித்து 10 மொழிகளில் 6 விதமான திட்டங்களில் நடந்துவரும் வேதவாசிப்பு சவால் (BRC) குழுக்களுக்காக.
4. 52 நாடுகளில் இருந்து வேதவாசிப்பு சவால்களில் பதிவு செய்துள்ள 12 ஆயிரத்திற்கும் அதிகமான தொடர்புகளுக்காக.
5. வேத தியான குழுக்கள் மற்றும் சிறுவர் வேதவாசிப்பு குழுக்களுக்காக.

### ஜெபிப்போம்:

1. வேதவாசிப்பு சவால்களில் இணைகின்ற ஒவ்வொருவரும் எல்லா தடைகளையும் தாண்டி வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்ய.
2. வேத தியான குழுக்கள் (BMG) January 2025 முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட.
3. Nepali மொழியில் புதிய வேதவாசிப்பு சவால் குழு ஆரம்பிக்கப்பட மற்றும் அதற்கான ஆயத்தப் பணிகளுக்காக. அந்த பணியில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு ஆண்டவர் ஞானத்தை தர.
4. GODependence செய்தி மடல் ஒவ்வொரு மாதமும் தவறாமல் வெளிவர, அது அநேகருக்கு பயனுள்ளதாக இருக்க.
5. டிசம்பர் 16 - சர்வதேச வேதாகம வாசிப்பு தினத்தை (International Day of Bible Reading) முன்னிட்டு திட்டமிடப்படும் நிகழ்வுகளுக்காக மற்றும் உலகமெங்கிலும் வாழும் கிறிஸ்தவர்கள் உற்சாகத்துடன் இந்த தினத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க.

**தேவனுடைய வார்த்தையை வாசிக்கும் கடமையில் நாம் தவறிவிடுகிறோம்... அறிவுக்கூர்மை இல்லாததோ அல்லது ஆர்வமின்மையோ அல்ல நம் பிரச்சனை. சோம்பேறிகளாக இருப்பதுதான் நமது பிரச்சனை. - ஆர்.சி. ஸ்ப்ரௌல்**

# தேவன் உங்களிடம் கேட்கும் 5 கேள்விகள்



சகோ. அற்புதராஜ் சாமுவேல்

நம் வாழ்க்கையில் நாம் பலவிதமான கேள்விகளை அனுதினமும் எதிர்கொள்கிறோம். சில கேள்விகள் நமக்கு அசவுகரியத்தை தருகின்றன, ஆனால் சில கேள்விகள் நமக்கு ஆறுதலைத் தருகின்றன. மக்கள் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் வேதாகமத்தில் பதில் உண்டு என போதகர்கள் கூறுவதை நீங்கள் கேட்டிருக்கக்கூடும். அது உண்மைதான் என்றாலும் கூட, பரிசுத்த வேதாகமமானது நம் கேள்விகளுக்கெல்லாம் பதில் தருகிற புத்தகம் மட்டுமல்ல; அதில் ஏராளமான கேள்விகளும் இருக்கின்றன. பரிசுத்த வேதாகமத்தில் சில கேள்விகள் பதில் தர அவசியம் இல்லாதவை (rhetorical). ஏனெனில் கேள்வியிலேயே பதில் இருக்கும். சில கேள்விகள் தேவன் யார் என்பதை நமக்குச் சொல்பவையாக இருக்கிறது. சில கேள்விகள் நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பதற்கு சிந்திக்கத் தூண்டுபவைகளாக இருக்கின்றன. தனி நபர்களிடமோ அல்லது தம் மக்களிடமோ தேவன் கேட்ட பல கேள்விகளை நாம் பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். நம் தேவன் இன்றும் உயிரோடிருக்கிறவராக இருக்கிறபடியால், அவர் நம்முடன் பேசி இடைபடுகிறார். தேவன் உங்களிடம் ஒரு கேள்வி கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்? தேவன் தம் ஜனங்களிடம் கேட்ட ஒரு சில கேள்விகளை நாம் இங்கே பார்ப்போம்.

### 1. நீ எங்கே இருக்கிறாய்?

பரிசுத்த வேதாகமத்தில் மனிதனிடம் முதன் முதலாக கேட்கப்பட்ட கேள்வி, "நீ எங்கே இருக்கிறாய்?" என்பது ஆகும். "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்" (ஆதி 3:9). ஆதாம் எங்கே இருக்கிறான் என்பதை தேவன் அறியாமல் இப்படி கேட்டார் என்று நாம் பொருள் கொள்ளக் கூடாது. தேவன் ஆதாமை வைத்த இடத்தில் / நிலையில் அவன் இருக்கிறானா என்று அவர் கேள்வி கேட்கிறார். அப்பொழுது என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அது அவன் பாவத்தில் விழுந்த நிலையைக் குறிக்கிறது. மற்ற மதங்களுடன் ஒப்பிடும்போது, கிறிஸ்தவத்தில் தேவனுக்கும் மனிதனுக்குமான உறவு தனித்துவமானது ஆகும். நம்மை நாமே நிதானித்துப் பார்ப்போம்: நாம் எங்கே இருக்கிறோம்? தேவன் நம்மை வைத்த இடத்தில் அல்லது நாம் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிற இடத்தில் நாம் இருக்கிறோமா?

### 2. இங்கே உனக்கு என்ன காரியம்?

எலியா ஒரு மிகப்பெரிய எழுப்புதலை கர்த்தருக்காக முன் நின்று நடத்தியபின், தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக யேசபேலுக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருந்தபோது, தேவன் அவனைப் பார்த்து, "எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்?" என்று கேட்டார். "அங்கே அவன் ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான்; இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர்: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார்." (1 இராஜா 19:9).

நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நாம் நமது மனித பலவீனங்கள் குறைவுகள் ஆகியவற்றைப் பற்றி யோசித்து நம் மூலமாக தேவன் செய்ய விரும்புகிறவைகளில் இருந்து ஓடி ஒளிந்துகொள்ள முயற்சிக்கக் கூடாது. தேவனுடைய வேலையை நாம் செய்வதற்கான நமது திறமை மற்றும் தகுதிகளை அவர் ஒருபோதும் பார்ப்பதில்லை. தேவன் அவருடைய வேலைக்கு நம்மை அழைக்கும்போது, அதைச் செய்வதற்கான பலத்தையும் பயிற்சியையும் அவர் நமக்குத் தருகிறார். "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்று நாம் தேவனிடம் கேட்கும்பொழுது அவர் நமக்கு பாதைகாட்டி, அவருடைய வேலையைச் செய்வதற்கான வழிகாட்டுதலையும் தருகிறார்.

### 3. உன் கையிலிருக்கிறது என்ன?

மோசே மதியீனமாக ஒரு எகிப்தியனைக் கொன்று அதன் பின் மீதியானுக்கு உயிர்தப்ப ஓடிப்போனபின்பு, அவன் வனாந்திரத்தில் தன் திறமைகள் அனைத்தையும் மறந்துபோனான் (அப்.7:22). அவன் தன் ஜனங்களை முன்நின்று வழிநடத்துவதற்குப் பதிலாக, தன் மாமனாரின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அவன் எகிப்துக்குத் திரும்பி தன் ஜனங்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கும்படி தேவன் அவனிடம் சொன்னபோது, மோசே சாக்குப் போக்குகளையும், உண்மையாகவே தேவன் அவனை அனுப்பினார் என்று ஜனங்கள் அவனை நம்புவதற்கு தேவன் அடையாளம் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தான். ஆகவே, "கர்த்தர் அவனை நோக்கி: உன் கையிலிருக்கிறது என்ன என்றார்" ( யாத்.4:2).

தேவன் எப்பொழுதுமே நம் கைகளில் இருப்பவைகளைக் கொண்டே அவருடைய அற்புதங்களைச் செய்கிறார். நாம் நம் கைகளில் இருப்பவற்றை தேவனிடம் கொடுக்கும்போது, அவர் அதை தமது மகிமைக்காக எடுத்து பயன்படுத்தி, அவர் யார் என்பதை ஜனங்கள் அறிய உதவுகிறார். நம் கைகளில் இருக்கிற சாதாரணமான எதற்கும் பயனற்றவை தேவனுடைய வல்லமையான கரங்களில் அசாதாரணமானவைகளாக மிகவும் விலைமதிப்பற்றவையாக மாறிவிடுகிறது. அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, நம் கரங்களில் (நம்மிடம்) இருப்பவைகளை தேவனிடம் முழுமையாக ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் அதை பலருக்கும் ஆசீர்வாதமானதாக மாற்றுகிறார்.

### 4. என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?

நாள்பட்ட வியாதி அல்லது நீண்டகாலமாக நம்மிடம் இருக்கிற ஒரு பிரச்சனை இருக்கும்போது, நமக்கு உடனடி தீர்வு / சுகம் உண்டாகும் என்று ஒருவர் சொன்னால் அதை நம்புவதற்கு மிகவும் கடினமானதாக நமக்கு இருக்கும். நாம் ஒரு மாற்றத்தை / தீர்வைக் காண விரும்பினாலும், நாம் அதை உடனடியாக ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதில்லை. தேவன் சாராளிடம் அவள் ஒரு மகனைப் பெறுவாள் என்று சொன்னபோது, அவளால் அதை நம்ப முடியவில்லை. அப்பொழுது தேவன், "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" (ஆதி.18:14) என்று அவளிடம் சொன்னார். தேவன் நம்மிடம் இப்படிப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்கும்போது, நாம் அவரைப்பற்றி என்ன நினைக்கிறோம் என்பதை அவர் அறிந்துகொள்ள விரும்புகிறார்.


"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" (எரேமியா 32:27).

### 5. நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?

இயேசு தன் சீடனாகிய பேதுருவிடம் கேட்ட ஒரு முக்கியமான கேள்விக்கு உங்கள் கவனத்தை திருப்ப விரும்புகிறேன். " இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்" (யோவான் 21:15). "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்று இயேசு திரும்பத் திரும்ப பேதுருவிடம் கேட்டபோது, அது அவனுடைய மனதில் பல கேள்விகளை உண்டாக்கி இருக்கும். இக்கேள்விகளினாலே, பேதுரு துக்கப்பட்டான் என்பதை வாசிக்கிறோம். இயேசு ஏன் திரும்பத் திரும்ப பேதுருவிடம் இக்கேள்வியைக் கேட்டார் என நாம் யோசிக்கக்கூடும். இயேசுவின் மீது பேதுரு வைத்திருந்த அன்பு மற்றும் விசுவாசத்தை அவன் உறுதிப்படுத்தும்படி அவர் செய்தார்.

முதல் இரண்டுமுறை இயேசு கேள்வி கேட்கும் போது, நிபந்தனையற்ற அன்பைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையை இயேசு பயன்படுத்தினார். ஆனால் பேதுரு அதைப் புரிந்துகொள்ள வில்லை. ஆகவே, மூன்றாவது முறையாக இயேசு கேட்கும் போது, பேதுரு பயன்படுத்திய சகோதர சிநேகத்தைக் குறிக்கும் வார்த்தையை பயன்படுத்துகிறார். "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்" (யோவான் 21:17). பேதுருவின் பதிலில் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். நாம் தேவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படியும்போது, அவர் நம் வாழ்க்கைக்கான அவருடைய திட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

நாம் மற்ற எதையும்விட அதிகமாக இயேசுவை நேசிக்கவேண்டும் என அவர் விரும்புகிறார். அவர் நம் மீது கொண்ட அன்பினாலே, அவர் மனிதனானார்; சிலுவை மீது தம் ஜீவனை நமக்காக கொடுத்து அவர் நம்மீது கொண்ட அன்பை வெளிப்படுத்தினார். சில உலக மனிதர்கள் அவர்கள் செய்யும் குற்றச்செயல்களுக்கு பங்காளிகளைத் தேடுகிறார்கள். ஆனால் இயேசுவோ நீதியின் கிரீடத்தை நாம் பெறவேண்டும் என அவர் நம்மை அழைக்கிறார். இயேசு நம்மை நேசிப்பதுபோல நாமும் அவரை நேசிக்க / அன்பு செய்யவேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார்.



இந்தக் கேள்விகளை இயேசு இன்று உங்களிடம் கேட்டால், உங்கள் பதில் என்னவாக இருக்கும்?

"நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற(து)" என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது (ரோமர் 5:5). இந்த தேவபக்திக்குரிய அன்பை நாம் நம் அனுதின வாழ்வில் கடைபிடிக்கவும், நம் அயலகத்தாருடன் பகிர்ந்துகொள்ளவும் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

**சந்தேகம் வரும் நேரங்களில் உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசியுங்கள்.**

# 5 வருடங்களாக GODependence

தேவனுடைய அளவில்லாத கிருபையினாலும் அவரது அனாதி திட்டத்தினாலும் 2019 ல் ஆரம்பித்து கடந்த ஐந்து வருடங்களாக GODependence ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்தவ உலகில் பலருக்கும் பல்வேறு விதமாக பயனுள்ள வகையில் செயல்பட்டு வருவதை நாம் அறிந்து வருகிறோம். இந்த ஊழியம் ஆரம்பித்து கடந்து வந்த பாதைகளை '5 வருடங்களாக GODependence' என்ற தலைப்பில் ஒரு கேள்வி-பதில் தொடராக நாம் அறிந்து கொள்ள இருக்கிறோம். இதனை ஆரம்பித்த டாக்டர். பேதுரு தேவதாசன் அவர்களிடமே நேரடியாக கேள்விகளாக கேட்டுத் தெரிந்து கொள்வோம்... வாருங்கள்.

**- சகோ. டென்சிங் டென்னிஸ், குவைத்.**

**கேள்வி: அண்ணே, கடந்த 5 வருடங்களாக நடைபெறும் GODependence ஊழியம் என்பதால் இது கோவிட்-19 ஊரடங்கு காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆன்லைன் ஊழியமா?**

**பதில்:** ஐந்து வருடங்களாக நடைபெறுகிறது என்பதனால் இது கொரோனா காலக் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஊழியம் என்று நினைத்துவிடக்கூடாது. அதற்கும் ஒரு வருடத்திற்கு முன்னரே தேவனால் இதற்கான விதை விதைக்கப்பட்டு அது முளைக்க ஆரம்பித்து விட்டது. நான் 2019 வருட லெந்து நாட்களில் 'இந்த நாளுக்காக ஜெப கரிசனை' (Prayer Concern for the Day) ஊழியத்தைச் சார்ந்த சகோ. சார்லஸ் மணி அவர்கள் முன்னெடுத்த 40 நாட்களில் முழு வேதாமத்தையும் வாசித்து முடிக்கிற சவாலில் கலந்து கொண்டேன். பரிசுத்த வேதாகமத்தை இவ்விதம் குறுகிய நாட்களில் வாசித்து முடித்தது எனக்கு வித்தியாசமான மற்றும் புதுமையான அனுபவமாக இருந்தது. நான் பெந்தேகோஸ்தே குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, கல்லூரி வாழ்க்கைக்குள் நுழையும் முன்னர் இரட்சிப்பின் அனுபவம் பெற்று, கல்லூரி நாட்களில் 'இந்திய நற்செய்தி மாணவர் மன்றம் - தமிழ்நாடு (EU-EGF)' மூலம் ஆண்டவருக்குள் வளர்ந்து, அதன் மூலம் தீவிரமாக ஊழிய காரியங்களில் ஈடுபட்டவன். நான் அதற்கு முன்னர் பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாடு முழுவதையும் மற்றும் பழைய ஏற்பாட்டில் பல புத்தகங்களையும் பல முறையும் வாசித்திருக்கிறேன். ஆனால் முழுமையாக 40 நாட்களில் பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக ஒரு முறை வாசிக்கும் பொழுது தான், இதுவரையும் ஒரு முறை கூட வாசிக்காத ஒரு சில புத்தகங்களும் இருந்திருக்கிறதே என்று எனக்குள்ளே குற்ற உணர்வடைந்தேன். இது போன்ற நிலை தான் பெரும்பான்மைக் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு சில ஊழியர்களுக்கும் இருக்கக் கூடும் என எனக்குள் எண்ணத் தோன்றியது.

அது மாத்திரமல்ல, கிறிஸ்தவ வட்டாரத்தில் காணப்படும் பல்வேறு தவறான உபதேசங்கள் மற்றும் கொள்கை குழப்பங்களுக்கெல்லாம் காரணமே வேத வசனத்தை குறித்த மக்களுடைய அறியாமை தான் என்பதை நான் உணர்ந்ததினால் ஆண்டவர் எனக்குக் கொடுத்த உள்ளுணர்வின் அடிப்படையில், இதற்காக நான் ஏதாவது செய்ய வேண்டும் என தீர்மானித்தேன். அடுத்த வந்த மே 2019 ரமலான் நோன்பு நாட்களில் ஒரே மாதத்தில் முழுவேதாகமத்தையும் வாசிக்கும் சவாலை குவைத்தில் எனது நெருங்கிய நண்பர்களிடம் அறிமுகப்படுத்தினேன். அதில் நான் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் ஆலோசனைகளும் ஜூலை 2019 முதல் முறையாக வேத வாசிப்பு சவால்களை முன்னெடுக்க உதவியாக அமைந்தன.

**கேள்வி: இதனை ஒரு ஊழியமாக முன்னெடுக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**

**பதில்:** 2015 முதல் நான் குவைத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிசெய்து வருகிறேன். நான் இந்தியாவில் இருந்த வரையில் எனது பணி நேரம் போக, கிடைக்கும் நேரமெல்லாம் ஆண்டவருக்காக மாணவ பட்டதாரிகள் ஊழியத்தின் உள்ளூர் ஜெபக் குழுக்களில் ஈடுபடுதல், அவற்றை ஒருங்கிணைத்தல், மாவட்ட மற்றும் மாநில அளவில் ஊழியங்கள் என பல்வேறு பொறுப்புகளில் அதிக ஆர்வம் மற்றும் ஈடுபாட்டுடன் உழைத்திருக்கிறேன். நான் குவைத் வந்த பிறகு எனக்கு அதிக ஓய்வு நேரங்கள் கிடைத்தது. அதனை முறையாக ஆண்டவருக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தீர்மானித்த பொழுது அதற்கான ஒரு சரியான வாய்ப்பு எனக்கு அமையவில்லை. இந்த நிலையில் தான் 2019 ல் நடந்த எனது தனிப்பட்ட வேத வாசிப்பு அனுபவத்தில் எழுந்த உள்ளுணர்வின் அடிப்படையில், இதைக் குறித்து ஜெபித்து யோசித்து வேத வாசிப்பு சவால்களை முன்னெடுத்த போது, தேவன் தந்த தரிசனத்தின் அடிப்படையிலே இது ஒரு ஊழியமாக உருவானது.

**பரிசுத்த வேதாகமம் மீதான உங்கள் விருப்பம் மிகவும் பெரிதாக இருக்கும்போது உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை மிகவும் பலமுள்ளதாக இருக்கும். - ஸ்டீவன் லாசன்**

**கேள்வி: மே 2019 ல் ரம்ஜான் நாட்களில் ஒரே மாதத்தில் முழுவேதாகமத்தையும் வாசிக்கும் சவாலை எப்படி ஆரம்பித்து நடத்தினீர்கள்?**

**பதில்:** வளைகுடா நாடுகளில் வேலை செய்பவர்களுக்கு ரமலான் நோன்பு காலத்தின் 30 நாட்களிலும் தினமும் இரண்டு மணி நேர வேலைக்குறைவு உண்டு என்பது உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கலாம். முழு வேதாகமத்தையும் வாசித்து முடிப்பதற்கு 72 மணி நேரம் ஆகும் என்று ஒரு சில ஆய்வுகள் கூறுகின்றன. அதன் அடிப்படையில், ரமலான் காலத்தில் இப்படி கிடைக்கும் 60 மணி ஓய்வு நேரத்துடன் கூடுதலாக 12 மணி நேரம் செலவிட்டால் முழு வேதாமத்தையும் நான் மீண்டும் வாசித்து முடித்து விடலாமே என்ற ஒரு எண்ணம் எனக்கு தோன்றியதால், என்னுடைய நட்பு வட்டத்தில் குவைத்தில் உள்ளவர்களுக்கு கிறிஸ்தவ நண்பர்களுக்கும் மட்டும் இந்த சவாலை முன் வைத்தேன். அந்த சவாலை ஏற்றுக் கொண்டு என்னுடம் 28 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் 14 பேர் இரண்டு வாரத்தில் நடைபெற்ற மீள்பார்வையின் போது, சவாலில் தொடர முடியாமல் விலகிக் கொண்டனர். மீதமுள்ள 14 பேர்களில் 3 பேர் வெற்றிகரமாக வாசித்து முடித்தனர். இந்த சவாலினை முன்னெடுத்த முயற்சிகளின் நிர்வாக காரணங்களினால் நான் அப்போது வெற்றிகரமாக முடிக்கவில்லை என்பது வேறு விஷயம். வெற்றிகரமாக வாசித்து முடித்த 3 பேர்களுக்கும் நான் பாராட்டுச் சான்றிதழ்களுடன் பரிசுகள் வழங்கினேன். இது அவர்களை மிகவும் உற்சாகப்படுத்துவதாக இருந்தது.

**கேள்வி: இந்த வேத வாசிப்பு சவால்களில் தற்போது 6 வகையாக கால அளவுகளில் முழுவேதாகமத்தையும் வாசிக்கும் திட்டங்கள் இருக்கின்றன... அவை எப்படி ஆரம்பிக்கப்பட்டன?**

**பதில்:** இந்த ஒரு மாத சவாலில் கலந்து கொண்டவர்களின் அனுபவம் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் இதனை 3 மாத சவாலாக முன்னெடுக்கலாம் என முடிவு செய்தோம். எனவே ஜூலை 2019 ல் தமிழில் 3 மாத சவாலாக இந்தியாவில் உள்ள நண்பர்களுக்கும் அறிவிப்பு கொடுத்தோம். அதில் நூற்றுக்கணக்கானோர் இணைந்தனர். அடுத்தடுத்த மாதங்களிலும் முதலாம் நாளில் இதே 3 மாத வேத வாசிப்புத் திட்டங்கள் தொடர்ந்தன. இந்த சவால்களில் கலந்து கொண்டவர்கள் தங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தவே, இவை ஒவ்வொரு மாதமும் கூடுதல் பங்கேற்பாளர்களுடன் தொடர ஆரம்பித்தது. நண்பர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க செப்டெம்பர் 2019 ல் 3 மாத சவாலாக ஆங்கிலத்தில் ஆரம்பித்தோம். இதற்கிடையில் இந்த சவால்களில் கலம்து கொண்டவர்கள் பலரும் பல வித கருத்துக்களை உடையவர்களாக இருப்பதை அறிந்து, இவற்றை நடைமுறைக்கு சாத்தியமான முறையில் 1, 2, 3, 4 மற்றும் 6 மாதங்களில் தங்களுக்கு வசதியாக கால அளவில் முழு வேதாகமத்தையும் வாசிக்கும் சவால்களை அக்டோபர் 2019 முதல் தமிழ் மற்றும் ஆங்கில குழுக்களில் அறிமுகப்படுத்தினோம். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஒரு வருட வேத வாசிப்பு சவாலை அப்போது ஆரம்பிக்கவில்லை. ஒரு வருடத்தில் வேதாகமத்தை ஒரு முறை முழுமையாக வாசிப்பதெல்லாம் ஒரு சவாலே இல்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாக இருந்தது. ஆனால், பங்கேற்பாளர்களிடமிருந்து தொடர்ச்சியாக வேண்டுகோள்கள் வரவே, 2020 ஜனவரி முதல் அதனையும் பட்டியலில் இணைத்துக் கொண்டோம்.

ஒவ்வொரு மாதமும் புதிய வேத வாசிப்பு சவால்களில் பலரும் புதிதாக இணைந்து கொண்டே இருந்தனர். எனவே நான் தனிப்பட்ட முறையில் நடத்தி வந்த இந்த வேத வாசிப்பு சவால்களை மேற்கொண்டு என்னால் தனிஒருவனால் நடத்த இயலாது என்பதை உணர்ந்தேன். எனவே அக்டோபர் 2019 இறுதியில் ஜெபத்துடன் முடிவெடுத்து, இந்த சவால்களை மேற்கொண்டு முன்னெடுக்க இணைந்து குழுவாக செயல்பட கிறிஸ்தவ ஊழிய வாஞ்சை உடைய எனது நண்பர்கள் 30 பேருக்கு பொதுவான அழைப்பு விடுத்தேன். அவர்களில் 9 பேர் என்னுடன் இந்த ஊழிய முயற்சியில் தன்னார்வமாக இணைந்து செயல்பட இசைவு தெரிவித்தனர். எனவே நவம்பர் 2019 முதல் ஒரு குழுவாக இந்த GODependence ஊழியம் நடைபெற்று வருகிறது.

'அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?' (சகரியா 4:10). 2019 ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊழியம் 5 வருடங்கள் கடந்த பின்னர் தற்போது மாதந்தோறும் 10 மொழிகளில் 6 விதமான திட்டங்களில் வேதவாசிப்பு குழுக்கள் மாதத்தின் முதலாம் நாளில் ஆரம்பித்து நடந்துவருகின்றன. இவற்றில் இந்தியர்கள் மட்டும் அல்லாமல், உலகத்தின் அனைத்து கண்டங்களிலும் உள்ள 52 நாடுகளில் இருந்து 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நமது வேத வாசிப்பு சவால்களில் பதிவு செய்து கொண்டு பயனடைந்துள்ளனர். வேத வாசிப்பு சவால்களையும் தாண்டி வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி போன்ற பல்வேறு காரியங்களை செய்ய தேவன் அனுக்கிரம் பாரட்டுகிறார். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

*(தொடர்ந்து கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்வோம்... அடுத்த இதழில்)*

**நான் எவ்வளவு அதிகமாக தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்கிறேனோ, அந்தளவுக்கு அதிகமாக என் விசுவாசம் பெரிதாக இருக்கும். - R.C. ஸ்ப்ரௌல்**

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.



வேதாகமம் முழு உலகிலும் மிகவும் மகிழ்ச்சிகரமான புத்தகம் ஆகும்; அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.
- சார்லஸ் ஸ்பர்ஜன்

தேவனுடைய வார்த்தையை அனைவரும் வாசிக்கவும், அறியவும் தக்கதாக அனைவருக்கும் பரிசுத்த வேதாகமத்தை கிடைக்கச் செய்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேவனால் ஏற்படுத்தப்பட்ட சிறுமி மேரி ஜோன்ஸ் அவர்களின் நினைவாக 16 டிசம்பர் 2023 அன்று, முதன்முதலாக "சர்வதேச வேதவாசிப்பு தினத்தை" (International Day of Bible Reading) அனுசரித்தை GODependence குழுவிற்கு கிடைத்த பாக்கியமாக கருதுகிறோம். அந்த நாளில் Zoomல் நடைபெற்ற ஆரம்பவிழா கூடுகையில் நூற்றுக்கணக்கான GODependence வேதவாசிப்பு சவால் குழுக்களின் பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த சர்வதேச வேதவாசிப்பு தினத்தை அனுசரிக்கும்படியாக எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம் உலகம் முழுவதும் இருந்து 5000 க்கும் மேற்பட்டோர் இது குறித்து அறிந்து கொண்டனர்.

ஞானம், வழிகாட்டுதல் மற்றும் அகத்தூண்டுதல் போன்றவை பொதிந்து கிடக்கும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள இந்த முக்கியமான சந்தர்ப்பம் நம்மை அழைக்கிறது. இந்த முறை இது முன்பை விட இன்னும் அதிகமாக உலகளவில் விரிவடைய திட்டமிடுகிறோம்.

**கடந்த வருட அனுபவங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவைகளை 16 டிசம்பர் அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்திற்கான செயல்படுகளாக நாங்கள் பரிந்துரைக்கிறோம்.**

**ஒரு தனிநபராக நான் சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் எப்படி கலந்து கொள்ளலாம்?**

*டிசம்பர் 16 அன்று சற்று நேரம் ஒதுக்கி வேதவசனங்களை வாசிக்க, தியானிக்க அதிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கைக்கு குறிப்பெடுக்க, அதற்கு உங்களை அர்ப்பணிக்க நேரம் செலவழிக்கலாம்.
*ஏதாவது ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தை அல்லது வேத பகுதியை மனனம் செய்யலாம்.
*இதனை போட்டோ எடுத்து, உங்கள் WhatsApp Status, Facebook (முகநூல்), இன்ஸ்டாகிராம் போன்றவைகளில் பகிரலாம்.
*நீங்கள் மனப்பாடம் செய்யும் வசனங்களை வீடியோவாக ஒப்புவிப்பதையும் அவ்விதமே நீங்கள் உங்கள் சமூகவலைத் தளங்களில் பகிரலாம்.
*உங்கள் நட்பு வட்டாரத்தில் தேவைப்படும் யாருக்காவது பரிசுத்த வேதாகமத்தை பரிசளிக்கலாம்.
*அவற்றை அவ்விதம் சமூக வலைத் தளங்களில் பகிரும் போது #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2024 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.
*இதன் மூலம் உங்கள் நட்பு வட்டத்தில் இருக்கும் அனைவருக்கும் இது குறித்து விவரங்கள் தெரியவரும்.

**குடும்பம், சபை மற்றும் குழுக்களாக இதனை நாம் அனுசரிக்க, 16 டிசம்பர் அன்று நாம் என்ன செய்யலாம்?**

*குழுவாக கூடி அமர்ந்து, ஒரு குறிப்பிட்ட வேத பகுதிகளை அல்லது வேதாகமத்தின் புத்தகங்களை ஒருவர் மாறி ஒருவராக சத்தமாக வாசிக்கலாம்.
*மனப்பாட வசனங்களை ஒப்புவிக்கும் நிகழ்ச்சியை அல்லது போட்டிகளை நடத்தலாம்.
*வேதாகம வினாடி வினா போட்டிகளை நடத்தலாம்.
*பரிசுத்த வேதாகமம் அதன் வரலாறு, பின்னணி மகத்துவங்கள், தனிநபர்களில் சமுதாயத்தில் அதன் தாக்கம் குறித்து பேசும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யலாம்.
*மேற்கண்ட இவைகளில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட நிகழ்வுகளை நேரடி (In Person) நிகழ்ச்சியாகவோ அல்லது நேரலை (Online) நிகழ்ச்சியாகவோ நடத்தலாம்.
*நேரடி நிகழ்ச்சியாக நடத்தும் பொழுது அவற்றை போட்டோ அல்லது வீடியோ வடிவில் உங்கள் தனிப்பட்ட மற்றும் சபை, குழுக்களின் சமூக வலைத்தள பக்கங்களில் பகிரலாம்.
*இவ்விதம் நேரடி மற்றும் நேரலை நிகழ்வுகளை சமூக வலைத்தள பக்கங்களில் பகிரும் போது, #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2024 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.

**16 டிசம்பர் 2024 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் GODependence Team ஆக நாங்கள் என்ன செய்ய இருக்கிறோம்?**

*16 டிசம்பர் அன்று தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் தனித்தனியான Zoom கூடுகைகள்.
*தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தனித்தனியாக ஆன்லைன் மெகா வேதாகம வினாவிடைப் போட்டி.
*தங்கள் சமூக வலைத் தள பதிவுகளை பகிர்வதற்கென WhatsApp பயன்படுத்து பவர்களுக்காக டிசம்பர் 16 அன்று செயல்படும் ஒரு தற்காலிக வாட்சாப் குழு.
*16 டிசம்பர் அன்று தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடுபவர்களுக்கு சர்வதேச வேதவாசிப்பு தின ஹேஷ்டேக்குகளுடன் (#) வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்தல்.
*தொடர் வேதவாசிப்பு நிகழ்வை (Bible Readathaon) நடத்துதல்.
*GODependence வேதவாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் தேவையிலுள்ள நபர்களுக்கு முழுவேதாகமத்தை வழங்குதல்.


தனிநபர்கள் அளவில் பரிந்துரைக்கப் பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் GODependence குழு அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிகழவுகள் குறித்த விரிவான தகவல்கள் அடுத்த மாத இதழில் இடம்பெறும்.

வாருங்கள்... பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் சர்வதேச வேதாகம வாசிப்பு தினத்தை நாம் ஒருமித்து முன்னெடுப்போம்.

#IDBR2024 Facebook Page: https://tinyurl.com/IDBR-Dec16-FB
#IDBR2024 Instagram: https://tinyurl.com/IDBR-Dec16-Insta
#IDBR2024 YouTube: https://tinyurl.com/y8pn8ecr
#IDBR2024 X Page: https://tinyurl.com/3hmbydjs

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தைப் போற்றவும், நம் வாழ்வில் பரிசுத்த வேதாகமத்தின் நித்தியமான பொருத்தத்தைக் கொண்டாடவும் நாம் ஒன்று கூடுவோம்.

இதயப்பூர்வமான எதிர்பார்ப்புடன்,
**GODependence குழு.**




**இங்கே கொடுக்கப்பட்டுள்ள IDBRன் பிரத்யேக பக்கங்களில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.**

**#IDBR2024**

https://tinyurl.com/IDBR-Dec16-FB
https://tinyurl.com/IDBR-Dec16-Insta
https://tinyurl.com/y8pn8ecr
https://tinyurl.com/3hmbydjs

**தேவனும் பரிசுத்த வேதாகமமுமின்றி முழு உலகத்தையும் சரியாக ஆளுகைச் செய்வது சாத்தியமில்லை.**
**– ஜார்ஜ் வாஷிங்டன்**

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

## 30 செப்டம்பர் 2024 அன்றுடன் முடிவடைந்த GODependence வேத வாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்

### 1 மாதம்

- சகோதரி. ஷெரின் ரஞ்சித்
- சகோதரி. நதியா @ மேகிதா
- சகோதரி. ஆர்.ஜெயந்தி
- சகோதரி. டி. பிரேமா
- சகோதரி. எஸ். கீதா
- சகோதரி. வனிதா
- சகோ. ஷண்முகையா. எம்
- சகோதரி. ஹெப்சி வில்லிங்ஸ்டன்
- சகோதரி. ஆர் பத்மாவதி
- சகோதரி. டி. ஹெலன் ஜிஜி
- சகோ. தேபாஷிஸ் கோஸ்வாமி

### 2 மாதங்கள்

- சகோதரி. பி. ஜமுனா ராணி
- சகோதரிஃ. பி. பவித்ரா
- சகோதரி. நிஷா ஜங்டே
- சகோ. அமர் காம்ப்ளே
- சகோதரி. டி. சலோமி சகுந்தலா ராணி
- சகோதரி. எம். ஜெய செல்வி முத்துராமன்
- சகோதரி. ஜே. சங்கீதா ஜெனிஷ் சேகர்
- சகோதரி. திருமதி பி. கலாவதி ஏழுமலை

### 3 மாதங்கள்

- சகோதரி. ஜெபா ஏஞ்சல் ராணி கே
- சகோதரி. மிஸ். டி. ஹெலன் மெர்சி
- சகோதரி. அகஸ்டா கனி ஜி
- சகோதரி. ஃப்ளோரா பாக்கியா தாய்
- சகோ. ஜெபராஜ் பிளெட்சர் ஏ.எஸ்
- சகோதரி. டி. பிரிம்ரோஸ் ஜெபமேரி
- சகோ. எம் மார்க்
- சகோதரி. எஸ்தர் சாந்தினி ராஜூ
- சகோதரி. கொராசன் டி ஒல்லாடோ
- சகோ அருண் கிறிஸ்டோபர்
- சகோதரி. ஆர். கிருபா ஜான்சி மேரி
- சகோதரி. அன்னே சங்கீதா.டி
- சகோதரி. எஸ். ஜெப பாய் பத்மினி
- சகோதரி. பியூலா ஏனோக்
- சகோதரி. டி. லில்லி புளோரிடா
- சகோதரி. மரைன் பெல்சியா
- சகோதரி. சுஜிதா ஜூலியட்
- சகோதரி. ஆகாஷ் தல்வி

### 4 மாதங்கள்

- சகோதரி. வனிலா ரத்னராஜ்

### 6 மாதங்கள்


- சகோதரி. ஆர்க் ஃப்ளோராவின் எம் ஜான்
- சகோதரி. பிரிஜிடா எஸ்
- சகோ. எம் சாமுவேல்
- சகோ. லெமுவேல் பால்
- சகோதரி. பி. மணி பாப்பா
- சகோதரி. வயோலா ஜெபாஸ்
- சகோதரி. ஆரோக்கிய மேரி அனிதா. ஈ
- சகோதரி. ஆர். தமிழ் செல்வி
- சகோதரி. உமக நாகராஜ்
- சகோதரி. கே. பி. ஜெயபாரதி
- சகோதரி. எஸ். காசியா ஜெமிமா
- சகோதரி. ஜெபா ரோஸி ஜேம்ஸ்
- சகோதரி. தீபா தியோடர்
- சகோதரி. ஷைனி ஜோஸ்

### 1 வருடம்

- சகோதரி. தாசரி சுப்பையம்மா
- சகோதரி. ரெஜினா சாமுவேல்
- சகோதரி. சி. ரமணி
- சகோதரி. எஸ். ஜான்சி ஜூலியஸ்.
- சகோதரி. பானு ஜோசப்
- சகோதரி. ஜோசபின் லில்லி

## விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 1

அற்புதங்களையும் உவமைகளையும் கண்டு பிடி - வேதபகுதி: மத்தேயு




https://forms.gle/kBkMFzEUNDA45uTz8

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 15/11/2024 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்

அற்புதராஜ் சாமுவேல்

ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்

ஏ. ஆர். பீட்டர்

டெ. டென்சிங்


டார்வின் நேசகுமார் அ

ஷோபா தானியேல்

ஜோசஃபீன் ஷைனி பால்

கேதரின் சுஜி

பரிசுத்த வேதாகமம் உண்மையா இல்லையா என்பது பெரிய பிரச்சினை அல்ல. அது உங்களில் உண்மையானதாக இருக்கிறதா என்பதுதான் பெரிய பிரச்சனை. - A W டோசர்



# பர்சிலா

**பிறருக்கு நன்மை செய்ய தனது செல்வம் மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்தியவர்.**

**2 சாமுவேல் 17: 27-28; 19: 31-39**



2 சாமுவேல் புத்தகத்தில், பர்சிலா என்ற மனிதரை நாம் பார்க்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் குறைவாக அறியப்பட்ட நபராக இருந்தாலும், அவரது வாழ்க்கை நமக்கு பலவற்றை கற்றுத் தருகிறது.

அப்சலோமிடமிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தாவீது ராஜாவும் அவரது ஆட்களும் ஓடிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு அதிகமான உணவும் மற்றும் பிற பொருட்களும் தேவைப்பட்டன. பணக்காரரும் முதியவருமான பர்சிலா என்பவரும், மற்ற இரண்டு பேரும் உணவு, படுக்கை, பாத்திரங்கள் மற்றும் பிற பொருட்களை அவர்களுக்கு உதாரத்துவமாக கொண்டு வந்தனர் (2 சாமுவேல் 17: 27-28). அப்சலோம் இறந்த பிறகு, தாவீது எருசலேமுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது பர்சிலாவும் ராஜாவுடன் யோர்தானைக் கடந்து அவரை அங்கிருந்து வழியனுப்ப வந்தார். அப்போது ராஜா, பர்சிலா தன் இறுதிநாள்வரை அரண்மனையில் தன்னோடு தங்கவேண்டுமென்று அழைத்தார். பர்சிலாவோ தான் ஒரு முதியவராகையால் அரண்மனையின் ஆடம்பரங்களை அனுபவிக்க முடியாது என்று கூறி, அந்த அழைப்பை மரியாதையாக மறுத்தார்.

ஆனால், கிம்காம் அவருடன் அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்று பர்சிலா ராஜாவிடம் கேட்டுக் கொண்டார். அப்படியே கிம்காமும் தன் வாழ்நாளின் இறுதிவரை ராஜாவின் கீழ் ஒரு சிறந்த வாழ்க்கையை பெற்றிருப்பார் என்று நாம் கூறலாம்.


### பர்சிலாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவைகள்:

- நாம் நமது செல்வத்தை கடுமையான தேவையிலுள்ள மக்களுக்கு உதவப் பயன்படுத்த வேண்டும்.
- நாம் நமக்குள்ளதை குறித்து திருப்தி கொள்ளவேண்டும். நமது வாழ்க்கையின் தேவையற்ற ஆடம்பரங்களை நாம் நாடுதல் கூடாது.
- நமக்கு இலவசமாக வழங்கப்பட்டாலும், அவற்றை நாம் கொள்ளகூடாது என்று நம் இதயத்தில் தீர்மானிக்க வேண்டும்.
- மற்றவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு, நமது செல்வாக்கை நாம் நியாயமான முறையில் பயன்படுத்த வேண்டும்.

**- சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 1




**வேதபகுதி: மத்தேயு எழுதின சுவிசேஷம்**

**இடமிருந்து வலம்**

1. இயேசு ஞானஸ்நானம் பெற்ற நதி (4)
2. இயேசு ஆவிகளை எதினால் துரத்தினார் (4)
3. வானத்தின்பேரில் __பண்ணவேண்டாம் (5)
4. மரங்களின் வேரருகே வைக்கப்பட்டிருக்கிறது (3)
5. இயேசுவுக்கு பணிவிடை செய்தவர்கள் (7)
8. அக்கிரமம் மிகுதியாவதினால் தணிந்துபோவது (3)
10. இயேசு எங்கு உட்கார்ந்து இருந்தபோது சீஷர்கள் உலகத்தின் முடிவைப் பற்றி கேட்டார்கள் (5)
13. உயிர்த்தெழுந்த இயேசுவை சீஷர்கள் எங்கே கண்டார்கள் (4)

**வலமிருந்து இடம்**

7. காவலில் இருந்த யோவான் கிறிஸ்துவின் __களை குறித்து கேள்விப்பட்டான் (3)
9. யார் முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொன்னார்கள் (3)
11. பாழாக்குகிற அருவருப்பை குறித்து சொன்ன தீர்க்கதரிசி (4)
12. அந்தகாரப்படுவது (4)
14. இயேசு எத்தனை முறை மன்னிக்க சொன்னார் (5)

**மேலிருந்து கீழ்**

1. மனம் திரும்புங்கள் என்று முதலில் பிரசங்கித்தது (7)
3. இயேசு யாரோடு ஒப்புரவான பின் காணிக்கை செலுத்த சொன்னார் (5)
5. இயேசு விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திய இடம் (5)
6. ஆவியானவர் சோதிக்கும்படி இயேசுவை கொண்டு சென்ற இடம் (6)
8. பேதுருவின் சகோதரன் (5)

**கீழிருந்து மேல்**

9. தூதனால் எச்சரிப்பு பெற்று யோசேப்பு சென்ற இடம் (4)
13. சரீரத்தின் விளக்கு (2)
14. இயேசு பிறந்த போது ஆட்சி செய்த ராஜா (3)

**https://forms.gle/EzYBBS3fg7nuuGyu6**

**மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 15/11/2024 க்கு முன்பதாக அனுப்பவும்.**

சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**கர்த்தருடைய வசனத்தை அசட்டை செய்தல் உங்கள் ஆத்துமாவை கெடுத்துப் போடும்; தேவனுடைய வார்த்தையை தியானிப்பது ஆத்துமாவை போஷிக்கும்.**

# மத்தேயு

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 50 - கி.பி60
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.மு. 7 - கி.பி.26
**நூலின் ஆசிரியர்:** அப்போஸ்தலனாகிய மத்தேயு
**புத்தக வகை :** சுவிசேஷம்

## நூல் அறிமுகம்

- கிரேக்க மொழி பேசும் யூதர் நிறைந்த அந்தியோகியா போன்ற நகரங்களில் யூதக் கிறிஸ்தவர்களும் பிற இனத்துக்கிறிஸ்தவர்களும் ஆதித்திருச்சபையில் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களுக்குள் பல சிக்கல்கள் இருந்தன. இது தவிர யூதக்கிறிஸ்தவர்கள் பலர் மற்ற யூதர்களால் துன்புறுத்தப்பட்ட நிலையில் மனத் தளர்ச்சியடைந்து இருந்தனர். இயேசுதான் உண்மையான மேசியாவா என்ற சந்தேகம் அவர்கள் உள்ளத்தில் எழுந்தது. இச்சிக்கல்களுக்குத் தீர்வுகாண இந்நூல் எழுதப்பட்டது.
- யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா இயேசுதாம் எனவும், அவரே இறைமகன் என வலியுறுத்தவும் அவருடைய வருகையில் இறையாட்சி இலங்குகிறது என யூதக் கிறிஸ்தவர்களுக்கு அழுத்தமாக கூறவும், கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நிறைவு என்பதை எடுத்துக்காட்டவும் இந்நூல் எழுதப்பட்டது.
- யூதக் கிறிஸ்தவர்கள் பிற இனத்தாரையும் சீடராக்கும் பணியைச் செய்ய இந்நூல் அறை கூவல் விடுக்கிறது. மத்தேயு, இறையாட்சியின் நெறிகள் யூதச் சமய நெறிகளைவிட மேலானவை எனக் கூறிக் கிறிஸ்தவ மதிப்பீடுகளைத் தொகுத்துப் புதிய சட்டநூலாகத் திருச்சபைக்கு வழங்குகிறார். யாவரும் இப்புதிய சட்டத் தொகுப்பைக் கடைப்பிடிக்க அறைகூவல் விடுக்கிறார் (மத் 28:20) இதற்கு இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகள், முக்கியமாக அவரின் கலிலேயப் பணிகள் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றன எனவும் இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

## சூழலும் நோக்கமும்

- எருசலேம் தேவாலயத்தின் அழிவுக்குப் பின்னர் யூதச்சங்கங்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர். இயேசுவின் சீடர்கள் யூதத் தொழுகைக் கூடங்களை விட்டுவிட்டுத் திருச்சபையாகக் கூடிவரத் தொடங்கிவிட்ட காலத்தில் மன்னிப்பு, நல்லுறவு ஆகியவை இன்றியமையாதவை எனக் கற்பிக்க வேண்டிய சூழல் காணப்பட்டது.
- இயேசு கிறிஸ்துவே வாக்களிக்கப்பட்ட மேசியா என்பதை யூதர்களுக்கு நிரூபிக்க மத்தேயு விரும்புகிறார். மற்ற எந்த நற்செய்தியையும் விட, மத்தேயு சுவிசேஷம் யூத தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை இயேசு எவ்வாறு நிறைவேற்றினார் என்பதைக் காட்ட பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டுகிறது.

## முக்கிய வசனங்கள்

மத் 5:17, மத் 5:43-44, மத் 6:9-13, மத் 16:26, மத் 22:37-40, மத் 27:31, மத் 28:5-6, மத் 28:19-20

## புத்தகத்தின் சுருக்கம்

- மத்தேயு நற்செய்தி முதல் இரண்டு அதிகாரங்கள் கிறிஸ்துவின் பரம்பரை, பிறப்பு மற்றும் ஆரம்பகால வாழ்க்கை பற்றி விவரிக்கிறது.
- அங்கிருந்து இயேசுவின் ஊழியத்தைப் பற்றி விவரிக்கிறது. 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களில் கிறிஸ்துவின் போதனைகளின் விளக்கங்கள், மலைப் பிரசங்கம் போன்றவைத் தரப்பட்டுள்ளன.
- அதிகாரம் 10 சீடர்களின் பணி மற்றும் நோக்கத்தை உள்ளடக்கியது. அதிகாரம் 13 உவமைகளின் தொகுப்பாகும். அதிகாரம் 18 தேவாலயத்தைப் பற்றி விவரிக்கிறது. 21 முதல் 27 வரையிலான அதிகாரங்கள் இயேசுவைக் கைது செய்தல், சித்திரவதை செய்தல் மற்றும் சிலுவையில் அறைதல் பற்றி விவரிக்கின்றன. இறுதி அதிகாரம் உயிர்த்தெழுதல் மற்றும் பெரிய கட்டளையை விவரிக்கிறது.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனப் பகுதிகளிலிருந்து 60 முறை மேற்கோள் காட்டுவதின் மூலமாக இயேசு கிறிஸ்துவை இஸ்ரவேலின் ராஜாவாகவும் மேசியாவாகவும், தீர்க்கதரிசனங்களை இயேசு எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை இப்புத்தகம் நிரூபிக்கிறது. மத்தேயு தனது சுவிசேஷத்தை யூதர்களின் முன்னோடியான ஆபிரகாமிடம் தொடங்கி, தீர்க்கதரிசிகளிடமிருந்து அவரை விரிவாக மேற்கோள் காட்டுகிறார். "தீர்க்கதரிசி(கள்) மூலமாக உரைக்கப்பட்டது" (மத் 1:22-23, 2:5-6, 2:15, 4:13-16) என்ற சொற்றொடரை அடிக்கடி மத்தேயு பயன்படுத்துகிறார். மத்16:17, 13:35, 21:4-5 போன்ற வசனங்கள் பெத்லகேமில் அவருடைய கன்னிப் பிறப்பு (ஏசா 7:14, மீகா 5:2), ஏரோதின் மரணத்திற்குப் பிறகு எகிப்திலிருந்து திரும்பியது (ஓசியா 11:1), புறஜாதிகளுக்கு அவர் செய்த ஊழியம் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைக் குறிப்பிடுகின்றன (ஏசா 9:1-2; 60:1-3). உடல் மற்றும் ஆன்மா இரண்டையும் அவர் அற்புதமாகக் குணப்படுத்துதல் (ஏசா 53:4), உவமைகளின் வழியாக பேசுதல் (சங் 78:2) எருசலேமுக்குள் அவர் வெற்றிகரமான நுழைதல் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன (சகரியா 9:9).

## நடைமுறைப் பயன்பாடு

- சக யூதர்களில் பலர்-குறிப்பாக பரிசேயர்கள் & சதுசேயர்கள்-பிடிவாதமாக இயேசுவை தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். பல நூற்றாண்டுகளாக பழைய ஏற்பாட்டைப் படித்திருந்தும், இயேசு யார் என்ற உண்மையை அறியாமல் அவர்களின் கண்கள் குருடாகிவிட்டன. அவர்களுடைய கடின இதயத்திற்காகவும், அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவரை அடையாளம் காண மறுத்ததற்காகவும் இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார் (யோவான் 5:38-40). அவர்கள் தங்கள் சொந்த ஆசைகளை நிறைவேற்றி, அவர்கள் செய்ய விரும்பியதைச் செய்யும் ஒரு மேசியாவை விரும்பினர். எத்தனை முறை நாமும் நம்முடைய சொந்த நிபந்தனைகளின்படி தேவனைத் தேடுகிறோம்? நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பண்புகளை மட்டுமே அவரிடம் கூறி, அவரை நிராகரிக்கரிக்கிறோம்? பரிசேயர்களின் தவறை நாம் செய்யத் துணியக்கூடாது. தேவனை நம் சொந்த உருவில் உருவாக்கி, பின்னர் அவர் நம் தரத்திற்கு ஏற்ப வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

## நூலின் அமைப்பு

முன்னுரை:
இயேசுவின பிறப்பும் குழந்தைப் பருவமும் 1 - 2
பகுதி 1. பரலோகராஜ்ஜியம் பறைசாற்றப்படல் 3 - 7
1. நிகழ்ச்சி (3,4)
2. அறிவுரை (5-7) (மலைப்பொழிவு)
பகுதி 2. பரலோகராஜ்ஜியப் பணி 8 - 10
1. நிகழ்ச்சி (8,9)
2.அறிவுரை (10) (அப்போஸ்தலர் பொழிவு)
பகுதி 3. பரலோகராஜ்ஜியத்தின் தன்மை 11:1 - 13:52
1. நிகழ்ச்சி (11,12)
2.அறிவுரை (13:1-52) (உவமைப் பொழிவு)
பகுதி 4 பரலோகராஜ்ஜியத்தின் அமைப்பு 13:53 - 18:52
1. நிகழ்ச்சி (13:53 -17)
2.அறிவுரை (18) (திருச்சபைப் பொழிவு)
பகுதி 5. பரலோகராஜ்ஜியத்தின் வருகை 19 - 25
1. நிகழ்ச்சி (19-23)
2. அறிவுரை (24,25) (நிறைவுகாலப் பொழிவு)
முடிவுரை:
இயேசு துன்புற்று இறத்தலும் உயிர்தெழுதலும் 26 - 28

GODDependence

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்வதே சாத்தான் அவிழ்த்துவிடும் பொய்களுக்கு எதிரான மிகச் சிறந்த பாதுகாப்பு ஆகும்.

# சாட்சி

-சகோதரன். இம்மானுவேல் தங்கராஜன். ஆ.



**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு ...**

இம்மானுவேல் தங்கராஜன். ஆ.
* வயது 66.
* ஓய்வு பெற்ற தமிழ்நாடு அரசு அதிகாரி.
* என் மனைவி குடும்ப தலைவி.
* எங்களுக்கு ஒரே மகள், மருமகன், பேரன், பேத்தி.
* நாங்கள் தற்சமயம் இருப்பது தூத்துக்குடி.
* என் தகப்பன் ஒரு இந்து. தாய் கிறிஸ்தவர்.
* என் தாயாரின் இடைவிடாத ஜெபத்தினால் என் தகப்பனும் நாங்கள் சிறுவயதாய் இருக்கும்போது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். இப்போது அவருக்கு 90 வயது. அம்மாவுக்கு வயது 86. இருவரும் கர்த்தருக்கு சாட்சியாக ஆரம்ப காலம் முதலே வாழ்ந்ததால் எங்கள் முழு குடும்பமும் அதாவது நாங்கள் ஐந்து ஆண்கள், மூன்று பெண்கள் இயேசு கிறிஸ்துவை எங்கள் சொந்த இரட்சகராக கொண்டோம். குடும்ப ஜெபம் பாடல்கள், வேதவாசிப்பு இப்படி எல்லாம் ஒவ்வொரு நாளும் எங்கள் வீட்டில் உண்டு. ஒவ்வொரு நாளும் ஒருவர் ஜெபிக்க வேண்டும். தினசரி ஒரு வார்த்தை வேதத்தில் இருந்து படித்து என் அம்மாவிடம் சொல்லாவிட்டால் எங்களுக்கு காப்பி கிடையாது.
* எங்க அப்பா அம்மா எங்களை வளர்த்தது போல நாங்களும் எங்கள் மகளை வளர்த்தோம்.. அவள் கணவனும், இரட்சிக்கப்பட்ட ஒரு மகனே.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்?**

முழுமையாக என்றால் ஏறத்தாழ பத்து முறை இருக்கலாம்... சரியாக ஞாபகம் வைத்து சொல்ல முடியவில்லை. அவற்றில் GODEPENDENCE ன் வேத வாசிப்பு சவால்கள் மூலம் இரண்டு முறை. இரண்டு மாத சேலஞ்ச் அதைத் தொடர்ந்து ஒரு மாத சேலஞ்ச் தற்போது மூன்று மாத சேலஞ்சில் சேர்ந்து உள்ளேன்.

**நீங்கள் தற்போது வாசித்து முடித்திருக்கிற இந்த வேதவாசிப்பு சவால்... அது குறித்த விரிவான அனுபவங்கள்... அதன் ஆசீர்வாதங்கள்.. அதில் ஏற்பட்ட தடைகள்... அவற்றை மேற்கொண்ட அனுபவம்...**

இரண்டு மாத சேலஞ்ச் மற்றும் ஒரு மாத சேலஞ்ச் ஆகிய இரண்டு முறையிலும் நான் தனிப்பட்ட முறையில் வேதத்தை வேகமாக முழுமையாக படித்து முடித்து விட்டேன் என்பது உண்மை. ஆனால் அதில் எனக்கு மிகுந்த திருப்தி இருந்தது என்று சொன்னால் அது பொய். அதற்கான காரணம் பலதரப்பட்ட வேதாகம போட்டியிலும் நான் கலந்து கொண்டு வருவதால் இதில் நேரம் எடுத்து நிதானித்து ஆழமாக தியானித்து படிக்க முடியவில்லை.

இப்போதுள்ள மூன்று மாத சேலஞ்ச் எனக்கு மிக லெகுவாக அதே நேரத்தில் மிகவும் பிரயோஜனமாக உள்ளது.. அடுத்ததாக உங்களுடைய இந்த வேதாகம சேலஞ்ச் என்று ஒன்று இல்லாவிட்டால் நிச்சயமாக வேதத்தை முழுமையாக அடிக்கடி படிக்க முடியாது என்பதுதான் நிதர்சனமான உண்மை.. அதிலும் வாராவாரம் நீங்கள் அதை தணிக்கை செய்வதால் படித்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் மற்றவர்கள் முடித்து விட்டார்கள் நான் முடிக்கவில்லை என்ற போட்டி உணர்வும் இருந்தபடியால் எனக்கு படிக்க மிக ஆர்வமாக இருந்தது. அந்தந்த தேதியில் படித்து முடிக்க முடியாத பகுதிகளை எனக்கு மிகவும் பிடித்த அமைதியான காலை நேரம் அல்லது பின் இரவு நேரங்கள் இப்படி பயன்படுத்திக் கொண்டேன்.

**இவற்றில் GODependence வாட்சாப் குழுவின் நடைமுறைகள் எந்த அளவில் உதவின?**

நல்ல ஒழுங்கு, நல்ல கண்காணிப்பு, நல்ல ஜெப குறிப்புகள், ஞாயிறு குறிப்பிட்ட தேதி வரை நிர்ணயித்த பகுதியை படிக்க முடியாதவர்கள் படிக்க அன்று ஓய்வு கொடுப்பது.. அடுத்தது ஒரு சேலஞ்ச் முடிக்காவிட்டால் அடுத்த சேலஞ்ச் போகலாம் என்ற விருப்ப தேர்வு படிப்பவர்களுக்கு கொடுப்பது... காரியங்கள் இப்படி இருப்பதினால் எங்களுடைய காலநேரங்களை நன்மையான நித்தியத்திற்கான காரியங்களில் செலவழிக்க முடிந்தது என்பதுதான் உண்மை. அதில் ஒரு ஆத்ம திருப்தி இருந்தது.

**பரிசுத்தவேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஓரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

வேதத்தை அனுதினமும் வாசிக்க வேண்டும். உணர்ந்து வாசிக்க வேண்டும். அதை உட்கொள்ள வேண்டும். அதாவது ஆவியானவர் உணர்த்தும் வசனங்களை மனனம் செய்வது நல்லது. அப்போதுதான் சரியான நேரங்களில், சிக்கலான சமயங்களில், அந்த சமயத்துக்கு ஏற்ற வார்த்தையை ஆவியானவர் உங்கள் இருதயத்தில் போட்டு, உங்களை உணர்த்துவார், நல்ல முடிவெடுப்பதற்கு உற்சாகப்படுத்துவார். சரி செய்ய வேண்டிய காரியங்களை சரி செய்ய கண்டித்து உணர்த்துவார். ஆறுதல் தேவையான காரியங்களில் ஆறுதல் செய்வார்.

**தேவனின் சித்தத்தை அறிய, நமக்கு ஒரு திறந்த வேதாகமம் மற்றும் திறந்த உலக வரைபடம் தேவை. - வில்லியம் கேரி**

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

- **வேத வாக்கியங்கள், என்னை ஆறுதல் படுத்தினது; சீர்படுத்தினது** -SIS. R. BRITNEY
- **தடைகள் எல்லாம் தகர்த்து, வேதாகமம் வாசிக்க தேவன் கிருபை செய்தார்** -SIS. GNANA JEYA
- **வேதமும் நானும்;வேதத்தோடு இருக்கிற அனுபவமும், எனக்குள் மாற்றத்தை ஏற்படுத்தினது** -PR. K. PAUL MANOHARAN
- **15 முறை வேதாகமத்தை படித்ததால், பல நன்மைகளை பெற்றிருக்கிறேன்** -BRO SANTHOSH KUMAR
- **பரிசுத்தமான, பயனுள்ள, பலனுள்ள, பரலோக வாழ்க்கை வாழ வழிநடத்துவது வேதாகமம்** -BRO.G.EDWARD WILLIAM

# GODependence நிகழ்வுகள்




## சிறுவர் வேதாகம வாசிப்புச் சவால் (CBRC)

வழக்கமான கல்வியுடன் கர்த்தருடைய வேத வசனங்களையும் சிறுவர்களுக்கு ஊட்டி வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் குழந்தைகளுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால் (Children BRC) கடந்த 2023ம் வருடம் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தேவனுடைய கிருபையால் இன்றுவரை எந்த தடங்கல்களும் இன்றி, சிறு பிள்ளைகளும் வசனங்களை வாசிப்பதுடன் ஒவ்வொரு வாரமும் சில வசனங்களை மனனமும் செய்து கர்த்தருக்குள்ளாக வளர்ந்து வருகிறார்கள். உங்கள் குழந்தைகள் இதில் கலந்து கொள்ள விருப்பம் இருந்தால் +965 6596 2559 என்ற WhatsApp எண்ணில் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.





## GODEPENDENCE TEAM ன் சிறப்புக் கூடுகை

தேவனுடைய கிருபையினால் GODependence குழுவினரின் சிறப்பு குடும்பக் கூடுகை கடந்த 2024 ஜூலை மாதம் 28 ஆம் தேதி சனிக்கிழமை அன்று சென்னையில் LIFE FOCUS SOCITY வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் கடந்த நான்கு ஆண்டுகளாக கர்த்தர் GODependence ஊழியத்தை நடத்தி வந்த பாதைகளை நினைத்து கர்த்தருக்கு நன்றி செலுத்தினோம். கர்த்தருடைய நாமத்தை ஒன்று சேர்ந்து துதித்து, அவரை மகிமைப்படுத்தி ஆராதனை செய்து, குடும்பமாக ஐக்கியம் கொண்டது கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. அது மட்டுமல்லாமல் வருகின்ற வருடங்களில் இன்னும் சிறப்பாக GODependence ஊழியத்தின் மூலம் மக்களை வேதாகமத்தோடு ஐக்கியப்படுத்தும்படியாக என்னென்ன காரியங்களை நிறைவேற்றலாம் என்று அநேக திட்டங்களும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

## வேதவாசிப்புச் சவால்கள் (BRC)

GODependence ஊழியத்தின் மூலமாக 10 மொழிகளில் (ஆங்கிலம், தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா, ஹிந்தி, மராத்தி, பெங்காலி & பஞ்சாபி) 6 வகையான கால அளவுகளில் (முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்) வேத வாசிப்புச் சவால்கள் நடைபெறுகின்றன. Whatsapp ல் ஒவ்வொரு மாதமும் முதலாவது தேதியில் புதிய வேதவாசிப்புச் சவால் குழுக்கள் ஆரம்பமாகிறன.

நீங்கள் இவைகளில் பங்கெடுத்து வேதாகமத்தை முறையாக வாசிக்க தீர்மானம் எடுங்கள். நீங்கள் ஒரு வேதவாசிப்புத் திட்டத்தில் இணையுங்கள். பிறகு, உங்களது மற்ற நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்தத் திட்டத்தில் சேரும்படி அவர்களுக்கும் இவற்றை அறிமுகப்படுத்துங்கள்.

**“மனித வாழ்வின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை வேதாகமம்”**





## வேத தியான குழுக்கள் (BMG)

GODependence மூலம் நடைபெறும் வழக்கமான வேத வாசிப்பு சவால்களுடன் (BRC) முறையாக பரிசுத்த வேதத்தை தியானிப்பதற்கான வேத தியான குழுக்களும் (BMG) ஆகஸ்ட் 2020 ல் ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெற்றன. பின்னர் அவை சிறு இடைவேளைக்குப் பின்னர் ஜூலை 2022 ல் ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெற்றன. தற்போது அவற்றை மீண்டும் 2025 ஜனவரி முதல் ஆரம்பித்து நடத்த இருக்கிறோம். இது குறித்த விரிவான தகவல்கள் அடுத்த இதழில் இடம்பெறும். இவைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**GODependence வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559 GODependence
GODependence - தமிழ்
GODependence - தமிழ்
GODependence
GODependence
GODependence

FOLLOW US!

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், இயேசுவை நோக்கிச் செல்ல வழிகாட்டுகிறது.**
**- சார்லஸ் ஸ்பர்ஜன்**